வலிகாமம் கிழக்கு பிரதேசசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 19 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 02 | 21இ200 | 01 | 339இ915 |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 01 | 2இ409இ262 |
| விடுபடல் | | | 01 | 2இ795இ977 |

ii. சபைக்கு 2009ம் ஆண்டு நன்கொடையாக சுசுயுடீ நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஐளுருணுரு 253-5122 இலக்க பிக்கப் வாகனத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமையால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் பெறுமதி கணக்குகளில் குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 65இ387இ028 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| நிதி ஒழுங்கு விதி 234 | 6 மாதத்திற்கு மேற்பட்ட ரூபா 11,608 பெறுமதியுடைய ஆறு மாற்றப்படாத காசோலைகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 2002ம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதிசேர் வரிச்சட்டம் | 2010,2011ம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 65,249 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாது நானாவித வைப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய மீண்டு வரும் செலவினமாக ரூபா 56இ817 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினமாக ரூபா 829இ097 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 27இ677இ101 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 34இ743இ840 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ை.இறைகளும் வரிகளும் | 775 | 625 | 5இ388 |
| ைை.குத்தகை வாடகைகள் | 7இ455 | 7இ823 | 126 |
| ைைை.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 2இ633 | 2இ696 | 73 |
| ைஎ.வேறு வருமானங்கள் | 41இ308 | 13இ351 | 37இ412 |

2.3.2 வருமான இழப்பு

புத்தூர் உபஅலுவலகத்தின் மாட்டு இறைச்சிக்கடை குத்தகைதாரரின் முதலாவது கேள்விதாரர் ரூபா 450,101 கோரியபோதும் பிரதேசசபை சட்டம் மற்றும் நிதி நிர்வாக ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத விடயமாகிய தொழில் முன் அனுபவமில்லை எனும் காரணத்தை குறிப்பிட்டு தவிசாளரினால் முதலாவது கேள்விதாரர் நிராகரிக்கப்பட்டு இரண்டாவது கேள்விதாரர் ரூபா 196,000 இற்கு தெரிவு செய்யப்பட்டமையால் சபையின் தவறான தீர்மானத்தினால் பிரதேச சபைக்கு ரூபா 254,101 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.3 வருமான முகாமைத்துவம்

i. மீளாய்வாண்டிலும் முன்னைய காலங்களிலும் அறவிடப்படவேண்டிய வீதவரி நிலுவை, வாடகை மற்றும் உத்தரவுக் கட்டணங்கள் ரூபா 5இ591இ198 அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஆதனங்களுக்கு விலைமதிப்பீடு செய்யப் படாமையால் பழைய ஆதன பெறுமதியில் வீதவரி கணிப்பிடுவதினால் வீதவரி வருமானம் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

2.3.4 நீதி மன்றத் தண்டப்பணங்களும் குற்றப் பணங்களும்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 756,834 பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமும் குற்றப்பணமும் வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

2.3.5 முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள்

---

2006, 2007, 2010, 2011, 2012 மற்றும் 2013ம் ஆண்டுவரை காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 88இ303இ605 பெறுமதியான முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் அறிக்கையிடும் திகதி வரையும் பெறுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

---

i. பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்ட பௌதீக வளங்கள்

---

சபையில் மூன்று வாகனங்கள் பயன்பாடின்றி வாகனத் தரிப்பிடத்தில் காணப்படுகிறது.

2.5 கணிப்பீட்டுச்சபை அறிக்கையில் காணப்பட்ட குறைபாடுகள்

---

கணிப்பீட்டுச்சபை அறிக்கையினை இருப்புப் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்தபோது 3 எண்ணிக்கையான பொருட்கள் மேலதிகமும் 14 எண்ணிக்கையான பொருட்கள் பற்றாக்குறையாகவும் காணப்படுகின்றது.

2.6 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---

2010ம் ஆண்டில் உள்;ராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு விருத்திக்கான நன்கொடை ரூபா 240,674 பயன்பாடின்றி நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.7 ஒப்பந்த நிர்வாகம்

---

மீளாய்வாண்டில் சபைநிதியில் மூலதன வேலைகளும் மூலதன பொருட்கள் கொள்வனவுக்குமாக ரூபா 4,550,000 வரவு செலவுத்திட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மூலதனவேலைகள் மற்றும் மூலதன பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

i. வருமானசேகரிப்பு
ii. வரவு செலவுத் திட்டம்
iii. வாகனப்பயன்பாடு
iv. மூலதன வேலைகள்
v. முற்பணங்கள்